தமிழ் உதயா (இலண்டன்)

# கவிதைகள்

யாருமற்ற வீட்டிற்குத் தானே
நான் திரும்பி இருக்கிறேன்
இன்றும்
இந்த நிமிட முள்ளின்
இசையற்ற பாடலைத்தானே
கேட்கப் போகிறேன்
இன்றும்
ஒற்றை ஜன்னலின்
புன்னகையற்ற திரையைத்தானே
போர்த்தப் போகிறேன்
இன்றும்
அருகே நிற்கும்
இலை உதிர்த்த கிளைகளை
ஆட்டாத காற்றைத்தானே
சுவாசிக்கப் போகிறேன்
இன்றும்
சைப்ரஸ் ஊசியிலைகளோடும்
பஞ்சுப் பொம்மைகளோடும்
பார்த்து சிரிக்கும் சிலைகளோடும்
இன்னும் எத்தனை இரவுகளை
புசித்து நிறைக்க முடியும்
என்னை என்னால்... ...
வழமை போல
முகம் தெரியா இந்த ஊரிலும்
கசப்பை உமிழ்ந்து கொள்ள
ஆதாம் தோட்டத்தில் விதைத்த
அப்பிள் மரங்கள் பழங்களைக்
காய்க்காமலா போய் விடும் ?

அந்த அகன்ற வெளியில்
தொலைந்து வட்டமிடும்
ஆலா போலவா நீ... . !
என் ஆழ்மன வெளியில்
சூரியனாய்
சுற்றிச் சுற்றி நீ... . !
வெளிச்சமாய் கிடந்த
உன்னை விரைந்தேறி
கார்முகில் மறைக்க காரணம்... ... ?
பொய்யற்று
போலியற்று சிலநொடியில்
தேவைக்கேற்று தெரிவாயா ?
முகம் காணப் புகழ்ந்து
முதுகுக்கு வஞ்சித்து
சாம்பல் பூசி மறைவாயா ?
உறவாடி
உள் புகைந்து
உயிர் களைந்து செல்வாயா ?
களவாடி
கதை நகைத்து
உயர்வு தாழ்வு பார்ப்பாயா ?
வாயார
வசை பாடி
வசதி கண்டு சேர்வாயா ?
வலியற்று
விவாதமற்று
வேதனைகள் தகர்ப்பாயா ?
நலிவடைந்த
கணங்களிலே
நகர்த்தி விட்டுப் போவாயா ?
என் பிரிய நட்பே
என் பாத்திரம்
உன்னில் எதுவெனச் சொல்... . . !
இந்த
நெடிய இரவை


ஓவியம்: ஜே.கே.

நொடிக்கொரு தடவை
நிசப்தம் கலைத்து
விடியும் வரை
ஏதோ
சொல்லிக் கொண்டே
இருக்கிறது
அந்த மூன்றாம் முள் !

கனவுகளுக்கு பரிசளித்த
எண்ணற்ற இரவுகளை
அனாதையாகப் பார்க்கும்
விடியல்களின் பாதங்கள்
தெருவில் நடக்கத் தொடங்கின
மலர்களின் சிரித்தலோடு
சிறு வார்த்தை கூட உதிராமல்
குளிர்ந்த புன்னகையை
எங்கேனும் உனக்காக
விட்டுச் செல்கிறேன்
வழிகளில் உடையும்
பனித்துளிகளுக்குத் தான்
எத்தனை ஆனந்தம்
ஆனாலும்... . .

ஒற்றை மழைத்துளி
மேகமாய் மறுஜனனம் எடுப்பது
எத்தனை சோகமானது
இருந்தும் அது மண் மீதான
தீராக் காதலென்பேன்.
காற்றின்
உயிர் பிரியும்
தருணங்களில்
பூமி மூர்ச்சை
இழந்து துடிப்பதும்,
வான் மீன்களின்
இமைத்துடிப்பில்
மீண்டும் துளிர்ப்பதும்
பிஞ்சுச் சூரியக்கீற்றுக்களை
இழுத்து நகர்வதும்
நடந்த படியே தான்... ...
இருந்தும்
விஷமேறிய
சிறிய பருக்கைகளைக்கூட
நீ சிதற வேண்டாம்
நான் பசியாற,
என் அன்புத் தோழனே !

- தமிழ் உதயா (இலண்டன்)